

செங்கல்பட்டு மாவட்டத்தில் நடைபெற்ற பொதுமக்கள் மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகளிடம் குறை கேட்பு கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு மனுக்களை பெற்று பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.அருண்ராஜ், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், எஸ்.எஸ். பாலாஜி எம்.எல்.ஏ., உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பலர் உள்ளனர்.

சென்னை கலைவாணர் அரங்க வளாகத்திலுள்ள மாநில செய்தி நிலையக் கூட்டாங்கில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமையில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மதுரை மற்றும் திருநெல்வேலி மண்டல இணை இயக்குநர்கள், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுடனான பணி ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், பட செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் ச. செல்வராஜ் மற்றும் துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




### விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய்நல்லூர் வட்டம், அரசூர் கிராமத்திலுள்ள

# மலட்டாற்றில் மூழ்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, மே 22 -

விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய்நல்லூர் வட்டம், அரசூர் கிராமம், கிழக்குத் தெருவில் வசித்துவரும் பழனி என்பவரின் மகள்கள் செல்வி.சிவசங்கரி (வயது 18), செல்வி.அபினயா (வயது 14) மற்றும் ராஜேந்திரன் என்பவரின் மகன் செல்வன்.ராஜேஷ் (வயது 13) ஆகிய மூவரும் நேற்று (21.5.2025) காலை அரசூர் கிராமத்திலுள்ள மலட்டாற்றில் குளித்துக் கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

இச்சம்பவத்தில், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதல்களையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

### "மோடி அரசு மாநில ஆளுநர்களை தவறாகப் பயன்படுத்துகிறது.." என்ற

# ராகுல் காந்தியின் குரலுக்கு நன்றி! முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

புதுடெல்லி, மே 22 -

**மோடி அரசு மாநில ஆளுநர்களை தவறாக பயன்படுத்துகிறது. இது கூட்டாட்சி மீதான ஆபத்தான தாக்குதல், இதனை எதிர்க்க வேண்டும் என்று மக்களவை எதிர் கட்சித் தலைவர் ராகுல் காந்தி அவர்கள், எட்டு மாநில முதலமைச்சர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கடிதம் எழுதியதை சுட்டிக்காட்டி சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார். இதற்கு நன்றி தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 'ராகுல் காந்தி அவர்களின் குரலுக்கு நன்றி' என்று தனது வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**

மக்களவை எதிர்கட்சி தலைவரும், காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவருமான ராகுல் காந்தி தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:-

“இந்தியாவின் பலம் அதன் பன்முகத்தன்மையில் உள்ளது ஒவ்வொன்றும் அதன் சொந்தக் குரலைக் கொண்ட மாநிலங்களின் கூட்டுதான் ஒன்றியம்.



மோடி அரசாங்கம் மாநில ஆளுநர்களை தவறாகப் பயன்படுத்தி அந்தக் குரல்களை நசுக்கி, தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளைத் தடுத்து வருகிறது. இது கூட்டாட்சியின் மீதான ஆபத்தான தாக்குதல், இதை எதிர்க்க வேண்டும்” என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ராகுல் காந்தி அவர்கள், தமிழ்நாடு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குடியரசுத் தலைவர் உச்சநீதிமன்றத்தில் 14 கேள்விகள் கேட்ட, விவகாரம் தொடர்பாக 8 மாநில முதல்மந்திரிகளுக்கு எழுதிய கடிதம் தொடர்பான பதிவையும் ராகுல் காந்தி, தனது எக்ஸ் வலைதள பதிவில் பகிர்ந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**நன்றி தெரிவித்து முதல்வர் பதிவு!**

இந்நிலையில், “இந்தியாவின் கூட்டாட்சி உணர்வை பாதுகாப்பதில் உங்கள் குரலுக்கு நன்றி” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:

அன்புள்ள சகோதரர் ராகுல் காந்தி, மாநிலங்களின் உரிமைகளையும் இந்தியாவின் கூட்டாட்சி உணர்வையும் பாதுகாப்பதில் உங்கள் குரலுக்கு நன்றி

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சென்னை தென்மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட

# மயிலாப்பூர், தியாகராயர் நகர் தொகுதிகளின் நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ அறிக்கை!

சென்னை, மே 22-

சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



சென்னை தென்மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட மயிலாப்பூர், தியாகராய நகர், சட்டமன்ற தொகுதிகளின் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ தலைமையில், சட்டமன்ற தேர்தலில் ஆற்ற வேண்டிய தேர்தல்பணிகள் குறித்து, மண்டல தேர்தல் பொறுப்பாளர் கழக துணை பொது செயலாளர்ஆ.ராசா எம்.பி. ஆலோசனை மேற்கொள்கிறார். இக்கூட்டம் இன்று மயிலாப்பூர் சட்டமன்ற தொகுதிக்கு சிறுங்கேரிமடம் சாலையில் உள்ள மகிழ்மன்றத்தில், 22.05.2025 மதியம் 2.00 மணிக்கும், தியாகராய நகர் சட்டமன்ற தொகுதிக்கு முத்துரங்கன் சாலை ஆதித்திய மஹாலில் 22.05.2025 மதியம் 3.00 மணிக்கு நடைபெறுகிறது.

மேற்க்கண்ட கலந்துரையாடல் கூட்டத்திற்கு அந்தந்த தொகுதிகளுக்குட்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிச்செயலாளர்கள், வட்டசெயலாளர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் கலந்துரையாடல் கூட்டத்திற்கு தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுகொள்கிறேன். (மேலே குறிப்பிட்ட நிர்வாகிகள் மட்டும்)

பொருள்:2026 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தல் குறித்து.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### இறையன்பன் குத்தூஸ் சிறப்புரை! எஸ்.மகாலிங்கம் தலைமையில்

# திருவாலங்காடு கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் பொதுக்கூட்டம்!

## திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ – வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கினர்!

திருவள்ளூர் மே 22;-

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருவலாங்காடு கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் திராவிட மாடல் ஆட்சியின் நான்காம் ஆண்டு சாதனை விளக்க பொதுக் கூட்டம் திருவாலங்காட்டில் ஒன்றிய கழகச் செயலாளர் எஸ் மகாலிங்கம் தலைமையில் நடைபெற்றது ஒன்றிய கழகத் துணைச் செயலாளர் என்.சண்முகம், கிளைக் கழகச் செயலாளர்கள் கே.குமார் , செல்வம், கோ.ஹரி பாபு, என்.ஆறுமுகம், ஜி.சீனிவாசன், வே.அரிதாஸ், கே.மணி வண்ணன் வரவேற்புரையாற்றினார்கள்

மாவட்ட துணைச் செயலாளர் சி.ஜெயபாரதி, மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் களாம்பாக்கம் எம்.பன்னீர்செல்வம், முன்னாள் ஒன்றிய குழு துணை தலைவர் சுஜாதா மகாலிங்கம், நிர்வாகிகள் ஜி.ரமேஷ் , நீலாவதி சீனிவாசன், ஜீவஞானப்பிரகாசம், எஸ்.பி. நூருல்லா, வழக்கறிஞர் தினகரன் , ஏ.பி. செந்தில் குமார், வி. ஜெகதீசன், வழக்கறிஞர் ஆர்.ராஜா , விடாரண்யம் , தட்சிணா மூர்த்தி , ஜி.கே.பன்னீர்செல்வம் , என். அப்துல் ரஹீம் டானியல் சி.எஸ்.முனிகிருஷ்ணன், துரை.கோபு, ஜெ. கலைவாணன், புனிதா, என். வெங்கட்டம்மா, ஆ. ஞான மூர்த்தி , என்.அண்ணாதுரை, ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்

இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ, திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு 5 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் சானை பிடிக்கும் இயந்திரம் இஸ்திரி பெட்டி வெல்டிங் தொழிலாளர் ஒருவருக்கு வெல்டிங் இயந்திரம் மெஷின் மற்றும் ஆயிரம் நபர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார் இக்கூட்டத்தில் சிறுபான்மை நல ஆணையம் துணைத் தலைவர் இறையன்பு குத்தூஸ் கலந்து கொண்டு திராவிட மாடல் ஆட்சியின் நான்காம் ஆண்டு சாதனைகள் குறித்து விளக்கி சிறப்புரையாற்றினார்

இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிட பக்தன் மாநில விவசாய அணி துணைச் செயலாளர் ஆர்.டி.இ.ஆதிசேஷன், ஒன்றிய கழகச் செயலாளர் மோ.ரமேஷ், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பி கே நாகராஜ், நிர்வாகிகள் தி.ஆ. கமலக்கண்ணன் காஞ்சிபாடி சரவணன், மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர் முடிவில் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் நந்தகுமார் ஒன்றிய தொண்டர் அணி அமைப்பாளர் ஜெய்சங்கர் நன்றி கூறினார்கள்

### திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில்

# மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே ரமேஷ் ராஜ் அறிவிப்பு!

திருவள்ளூர் மே 21;

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் தலைவர்கள் துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் 2505 2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி அளவில் மீஞ்சூர் ஒன்றியம் வல்லூரில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் மண்டல பொறுப்பாளர் ஆ. இராசா எம்.பி அறிவுறுத்தலின்படி சிறுபான்மையினர் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆலோசனைப்படி மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம். எஸ்.கே.ரமேஷ் ராஜ் எனது தலைமையில் தொகுதி பார்வையாளர்கள் தமிழ் க.அமுதரசன், அழகிரி சதாசிவம் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது .

அது சமயம் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் டி.ஜெ. கோவிந்தராஜன் எம். எல்.ஏ, இ.ஏ.பி. சிவாஜி, பி. ஜெ. மூர்த்தி, மாவட்ட நிர்வாகிகள் மு.பகலவன், மு. கதிரவன், கே.வி.ஜி. உமாமகேஸ்வரி, எம்.எல். ரவி, எஸ்.



ரமேஷ், கே. சுப்பி ரமணி, பி.வெங்கடாசலபதி, ஏ.வி. ராமமூர்த்தி, பா.செ. குணசேக ரன், டாக்டர் பரி மளம் விஸ்வநாதன், மாநில நிர்வாகி கள் சி.எச்.சேகர், கே.ஜி. பாஸ்கர் சுந்தரம், வெ.அன்பு வாணன், ஜி.ஸ்டாலின், ஏ. கே.சுரேஷ், ஏ.ஆர்.டி.உதய சூரியன், ஆகியோர் கலந்து கொள்கிறார்கள் எனவே திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் தலைவர்கள் துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம். எஸ்.கே.ரமேஷ் ராஜ் தெரிவித்துள்ளார்.

### மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள், பணியாளர்கள் - மாமன்ற உறுப்பினர்களுக்கான

# 2024-25ஆம் ஆண்டு விளையாட்டுப் போட்டி!

## மேயர் ஆர். பிரியா சான்றிதழ் – பரிசுகளை வழங்கினார்!

சென்னை,மே.22-

மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள் இன்று (21.05.2025) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்களுக்கான 2024-25ஆம் ஆண்டு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களைப் பாராட்டி சான்றிதழ் மற்றும் பரிசுகளை வழங்கினார்.

பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் பணியாளர்கள் பணிச்சுமையிலிருந்து விடுபடவும், புத்துணர்ச்சி பெறவும், அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டும் ஆண்டுதோறும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்களுக்கான 2024-25ஆம் ஆண்டு விளையாட்டுப் போட்டிகள் 10.03.2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டு, 25.03.2025 வரை நடைபெற்றது.

இந்த விளையாட்டுப் போட்டிகளில் பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களில் 1,670 ஆண்கள், 1,074 பெண்கள், 55 மாமன்ற உறுப்பினர்கள் என 2,799 நபர்கள் பங்கேற்றனர். இதில், பல்வேறு போட்டிகளில் 559 நபர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

இதில் கேரம் (Carrom), சதுரங்க ஆட்டம் (Chess), கால்பந்து (Football), டென்னிகாய்ட் (Tennikoit), எறிபந்து (Throw ball), கோ-கோ (Kho-Kho), டேபிள் டென்னிஸ், கைப்பந்து, கபடி போட்டிகள், இறகுப் பந்து (Shuttle Badminton), தடகளப் போட்டிகள், கயிறு இழுத்தல் மற்றும் Lucky Corner போட்டிகள், நீச்சல் போட்டி மற்றும் கிரிக்கெட் போட்டிகள் உள்ளிட்ட 17 பலதரப்பட்ட விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன.

இந்நிகழ்ச்சியில், துணை மேயர் மு.மகேஷ்குமார், துணை ஆணையாளர் (பணிகள்) வி. சிவகிருஷ்ணமூர்த்தி, நிலைக்குழுத் தலைவர்கள் பாலவாக்கம் த.விசுவநாதன் (கல்வி), தா.இளைய அருணா (நகரமைப்பு), டாக்டர் கோ.சாந்தகுமாரி (பொதுசுகாதாரம்), திருமதி சர்பஜெயாதாஸ் நரேந்திரன் (வரிவிதிப்பு (ம) நிதி), மண்டலக்குழுத் தலைவர் நேதாஜி யு.கணேசன், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி பிருந்தா ஸ்ரீ, இளம் சுருதி, சங்கர் கணேஷ், கமல், தேவி கதிரேசன், பவித்ரா, சரவணன், துர்கா, பா.சுப்பிர மணி, அமிர்த வர்ஷினி, அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

### ஆ.ராசா எம்.பி. சிறப்புரையில் - மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமையில்

# தியாகராயர்நகர் கிழக்கு - மேற்கு பகுதி தி.மு.க. ஆலோசனைக் கூட்டம்!

## பகுதிச் செயலாளர்கள் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ - கே.ஏழுமலை எம்.சி. அறிக்கை!

சென்னை, மே. 22 -

தியாகராயர்நகர் கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ, தியாகராயர்நகர் மேற்குப் பகுதிக் கழகச் செயலாளர் கே. ஏழுமலை எம்.சி, ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர்நகர் கிழக்கு - மேற்கு பகுதி தி.மு.க. ஆலோசனைக் கூட்டம் இன்று (22.05.2025 - வியாழக் கிழமை) பிற்பகல் 3 மணிக்கு, தியாகராயநகர் முத்துரங்கம் சாலை ஆதித்யா மஹாலில், சென்னை தென்மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் கழகத் துணைப் பொதுச் செயலாளர், கழக நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறார்.

எனவே தொகுதி பார்வையாளர், மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு தியாகராயர்நகர் கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ, தியாகராயர்நகர் மேற்குப் பகுதிக் கழகச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி, ஆகியோர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.



தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்கள் மூலம் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் மற்றும் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் பொன்குமார் ஆகியோர் சேலத்தில் நலத்திட்ட உதவிகளை வழங்கினர். உடன், மாவட்ட ஆட்சியர் இரா.பிருந்தாதேவி, , எஸ்.சதாசிவம் எம்.எல்.ஏ., உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு செயலாளர் அ.திவ்யநாதன், கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய செயலாளர் க.ஜெயபாலன், துணை மேயர் மா.சாரதாதேவி, உமாராணி உட்பட தொழிலாளர் நலத்துறை அலுவலர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் தொழிலாளர்கள் உள்ளனர்.




‘கவிதை உறவு 53’ ஆவது ஆண்டு விழா நிகழ்ச்சியில ஏர்வாடி எஸ்.இராதாகிருஷணன் எழுதிய ‘ஞாயிற்றுக்கிழமைகளில் நான் பொய் பேசுவதில்லை’ என்கிற நூலை கவிஞர் முத்துலிங்கம் வெளியிட தாயன்பன் பெற்றுக் கொண்டார். உடன் முனைவர் இறையன்பு , விஜயா தாயன்பன் , நல்லி குப்புசாமி செட்டியார், காவல்துறை அதிகாரி கவிஞர் வடுகம் சிவகுமார், திருமதி சிதம்பரம்மாள் ஏர்வாடி எஸ். ராதாகிருஷ்ணன், வானதி பதிப்பக அதிபர் ராமநாதன் ஆகியோர் உள்ளனர்.